Original Suit No. 181/2022 நாள்:29.04.2024

**வா.சா.1 பானுமதி அவர்களின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பெரியசாமி, முருகானந்தம், திவ்யா, மல்லிகா ஆகியோரிமிருந்து நான் கிரையம் வாங்கினேன். பழனிச்சாமியின் அப்பா பெயர் நினைவில்லை. மருதமுத்து பெரியசாமியின் தகப்பனார். மருதமுத்துவின் தாயாரை தெரியாது. அழகம்மாள் அவருடைய மகன் பழனிச்சாமி மற்றும் எனக்கு கிரையம் கொடுத்தவர்கள் கூட்டாக அனுபவித்த வருகிறார்கள் என்று நான் சொல்வது சரியல்ல. A1 ஆவணத்தின் அசல் என்னிடம் இருக்கிறது. A2 ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. கிரையம் பத்திரம் தான் இருக்கிறது. வேறு ஆவணங்கள் என்னிடம் இல்லை. நான் கிரையம் பெறுவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்து தான் கிரையம் பெற்றேன். வில்லங்கத்தை நீதிமன்றத்தில் கொடுத்தேனா என்றால் நினைவில்லை. நான் கிரையம் பெறுவதற்கு முன்பு பட்டா மருதமுத்து பெயரில் இருந்தது. பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்தேனா என்றால் நினைவில்லை. வழக்கு சொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்றால் நான் கிரையம் பெற்று 3 மாதம் தான் ஆகிறது. பத்திரம் தான் என்னிடம் இருக்கிறது. பிரதிவாதியிடம் நான் எந்த காலத்திலும் பாகம் கேட்கவில்லை என்றால் நினைவில்லை. A1 , A2 ஆவணங்களை அழகம்மாள், அவருடைய மகன் பழனிச்சாமி ஆகியோர் மருதமுத்துவிற்கு எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கு சொத்து பொருததுநில அபகரிப்பு அதிகாரிகளிடம் மனு கொடுததது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு பிறகு தான் மேற்படி நபர்கள் எனக்கு பெயரளவு கிரையம் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. டெய்சி ராணி, கனிமுத்து, கோமதி செல்வி ஆகியோரை இந்த வழககில் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழககை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2024.04.29 18:43:05 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.